ஸ்ரீ

திருமால்குறள்வெண்பா.

இது

சென்னை பிரஸிடென்ஸிகாலெஜ் தமிழ்ப்பண்டிதராகிய

புன்னை

மாடபூசி - ஸ்ரீநிவாஸாசாரியரால்

இயற்றப்பட்டு,

சென்னை
மிமோரியல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1899.

திருமாலகுறளம்பெண்பா.

(தாரணீ நாதி.)

திருமா மகளிருக்குந் சிர்மார்பன் பாத

மருமா மலர்பணிந்தேதன் மன்.

திருமால் குறள்வெண்பா செயதேவனார் காப்பு

வருமா லயன்முண் மலர்.

(நம்மாழ்வார் துதி.)

விடகோப வாயரவின் மேவினான் பாதச்

சடகோபா நீயே சரண்.

(ஆண்டான் துதி.)

காண்டா வனமெரித்த கண்ணற்குக் காதலியாம்

ஆண்டா னடியேயரண்.

(யதிராஜன் துதி.)

நீறூர் பரசமயச் சிக்கறுத்த நற்குருவாம

பூறூர் முனியரசைப் போற்று.

(மணவாளமாமுனிகள் துதி.)

ணவாள ரரணற்குக் கொன்னி டனித்த

மணவாள மாமுனிவா வா.

(நன்னூலார் துதி.)

கந்தாடையாரியர்தங் கான்மலரை யான்பணிந்தே

னந்தாத வின்பமுற நன்கு.

(அவையடக்கம்.)

சுளியன் கழகத்துட் கட்டுரைத்த தொச்சு

மெளிய னிசைத்த விது.

திருமால்குறள்வெண்பா.

நூல்.

மணிவண்ணன் பாத மலரைத் தலைமே
லணியுமவர்க் குண்டோ வவம். (க)
அவந்நீர வென்னெஞ்சே யானமருப் பிர்த்த
நவநீதக் கையனையே நாடு. (உ)
காடென்றும் வீடென்று நங்கையென்றுந் தங்கமெ
வாடுநெஞ்சே மாதவனை வாழ்த்து. [ன்றும் (ங)
வாழ்த்துவார் வல்வினையை வாட்டும் வரதவுனைத்
தாழ்த்துவார்க் குண்டோ தவம். (ச)
தவமென் றலைக்குடியென் றன்மமென் யாவு
மவனே யெனவறிவார்க் காங்கு. (ஞ)
ஆங்கமல நீர்போ லமைந்தும் பிரிந்திருப்பார்
தாங்கமலை மார்பன் றமர். (கூ)
தமரோ டமர்செய்த தன்மற்குக் கேளா
யமருடு நின்ற யருள். (எ)

அருளா லுலகெல்லா மன்றளக்க வீண்ட
கருளக் கொடியானே கா. (அ)
காதலிக்கா விந்திரனார்க் கான்பிடுங்கி வந்துகடற்
பூதலத்து ணட்டாய் புரா. (கூ)

புரந்தரனைப் போரின்கட் பொங்கொலியிற் சாய்த்த
நிரஞ்சனனை நீமனனே கேடு. (கo)
கேடித் தனையடைந்த நின்மலற்குப் பொன்னளித்
சாடிச் சகடழித்தான் றான். [தோன் (கக)
தானே கடவுளெனுந் தானவனை மார்பிடந்த
மானேறை வானவர்தம் மன். (கஉ)
திருமால்குறள்வெண்பா. ரு

மன்ன வளியென்று மாவலிபான் மண்ணிரந்த
வென்ன தணுக்குண்டோ வீடு. (கஊ)

ஈடாவார் யாவரே யெம்மா னினையடிக்கட்
கோடாத கொள்கையினர்க் கிங்கு. (கச)

குஞ்சரநீள் கையெறித்துக் கூவக் குளக்கரைவா
யஞ்சலென வந்தா யளி. (கஞ)
அரியா யயன்பாடு மம்பற்ப நாபா
வெளியேனுக் கின்றிங் கிரங்கு. (கசு)
நிரங்காத பூதனையை யின்னுயிரை மாய்த்த
வரன்கண்டீர் நந்தன் மகன்.' (கஎ)

மகன்வாய்ச் சகங்கண்ட மாதரசோ தைச்சு
மிகமாய மூட்டினன் மேல். (கஅ)
மேலான வாழ்வெல்லாம் விஞ்சு முலகளந்த
காலானை நாநினைத்தக் கால். (கஙு)

கான்மதியி னிற்குதித்துக் காளியற்குக் காலளித்த
நான்மறையின் மெய்ப்பொருளோ நாடு. (உ0)
நாடாது நாள்கழித்த நன்னெஞ்சே நாரணனைப்
பாடாது வீடேது பார். (உக)

பாராகி விண்ணுருகிப் பாவகமாய்க் காலாகி
நீராகி நின்றானே நேர். (உஉ)
நேராய் வெகுண்டெழுந்த நீள்கொக்கின் வாய்பிள
காராணைக் கண்ணனைநீ காண். [ந்த (உங)

காண்டா வனமெரித்த கண்ணன் கழலிணையை
வேண்டாதார் தம்பிறப்பு வீண். (உச)
சு திருமால்குறள்வெண்பா.

வீண்கோப மேற்கொண்டு வீடுமற்கு முன்னினமி
ஆண்மையற வேனெடுத்தா யாண்டு. (உடு)

ஆண்டுபல வீண்போக்கி யல்லலுறு நெஞ்சேயெம்
மாண்டவரின் மாண்டகுணத் தாழ். (உசு)

ஆழியா ழியினை யன்றுமறைத் தோன்சிறை
வாழி மனனே வழுத்து. (உஎ)

வழுத்தகினை யாமனமும் வானவர்கோ னின்னைப்
பழிச்சவறி யாதாவும் பாழ். (உஅ)

பாழாக்க வந்தபெரும் பாந்தட் பகுவாயைக்
கூழாக்கி னையென்னைக் கொள். (உக)

கொள்கொம் பிலாத கொடிநே ரடியேனை
யெள்காது காத்தளியல் பாம். (ஈ0)
பாருந்சாலிக் கன்றனைக்கட் பட்டாடை யிட்டளித்த
தீஞ்செய்தி பாவந் தெறும். (ஈக)
தெறுகின்ற கன்றனைவிளக் தெட்டபழ மண்மே
லுநவெறிந்த வுத்தமன்பெ ரோது. (ஈஉ)
ஒதிப் புகழ்த்தக்க வுத்தமன்கா ளீர்கண்டேன்
பாதிப் பிறைச்சடையான் பால். (ஈஈ)
பாலாழிக் கண்வளரும் பாம்பணையான் பாதத்தைத்
தோலாதென் னுவே துதி. (ஈச)

துதிசெய் தனபாதத் தொண்டுபுரிந் தோரை
மதியா தவர்பிறப்பு வம்பு. (ஈஞ)
வம்பேய்ந்த வைம்பொறியின் வாய்ப்பட் டழியாது
கொம்பேந் துரத்தானைக் கூறு. (ஈசு)
திருமால்குறள்வெண்பா. எ

கூறுபுகழ்க் கோவிந்தா கோணீங்கி யுள்விட்டி
லேறுவழி கண்டுகந்தி தனை. (ஈள)
தேமென்றழுகு பூந்துளவத் தெய்வத் திருத்தாராய்
வானென்றியா வாழ்வருள வா. (ஈஅ)

வாங்குகட லும்புவியும் வானும் பலநிரையு

மாங்குயக்குங் கண்ணே வனம். (கூ.கூ)
அன்னமா யாரணத்தை யம்புயற்கு முன்னுரைத்த
பன்னரியின் சிரேயின் பம். (சா0)

பஞ்சவர்க்குத் தூதுவலுப்பாம்புயர்த்தான் பட்
டஞ்சலின்றிச் செல்லு மருள். [டணைத்து (சாக)

அருணிறைந்த கேசவனே யச்சுதனே நின்னைக்
கருதார்க்குப் போமோ கரு. (சாஉ)

கருங்கடலிற் கண்துயிலுங் கார்வண்ணன் றானே
யொருங்குணர்வார் மோக்கத் துளர். (சாங)
உளனிலனு மும்பர்க்கு மோதவரி யானை
யெளியேன் புகழ்வ தெவன். (சாச)
எவன்மீளுய்ச் சோமுகனை யிடழித்து நின்ற
னவன்வண்ண மாங்கர்ச்சு னம். (சாஞ)

அர்ச்சுனற்குச் சாரதியா யாங்குபதி னெட்டளித்த
நிர்ச்சரரின் றேவை நினை. (சாசு)
நினையாது நின்னை நீள்புவியில் யாரே
வினைநீங்கி வீடெய்து வார். (சாள)
வார்சடையான் வாரிசத்தான் வானவர்கோன் றுமறி
கூர்படையாய் நின்புகழின் கூறு. [யார் (சாஅ)
அ திருமால்குறள்வெண்பா.

கூற்றுங் குலையுங் கொடுவினைபு நீங்கிடுமாம்
போற்றிற் புனிதன் புகழ். (சக)

புகழாச் சிசுபாலன் பொன்முடிபோய் வீழ
விகலாழி தொட்டாயிரங்கு. (நம)

இரங்கிநிரை மேய்த்தலிட மெங்கோனை முன்ன
மரங்கொழுமு கான மலை. (நக)

மலையான் மழைதடுத்த மாமுகிலின் பாத
மூலையாதென் னெஞ்சை யுணர். (நஉ)

உணர்வா ருளமலர்க்க ளூறுமதுத் தேனை
யுணர்போலுந் துன்பந் துடை. (நங)

துடைத்துப் படைத்தளிக்குந் தொன்மூ வுருவ
மெடுத்தவனை யெங்க ளிறை. (நச)

இறையாய்த் தலையாண்டு மென்னபயன் கண்மர்
மறையாள் ணும மறந்து. (நஞ)
மறந்தாலு மென்னை மறவா விகழ்ந்து
துறந்தாலு நீயே துணை. (நசு)
துணையு மெனக்கணியுந் தொல்புவியு மெல்லாம்
பணைமருதஞ் சாய்த்தான் பதம். (நள)
பதமறியா தெய்யதயிர்ப் பானைக்கு முத்தி

யெதுபதியே யீந்ததுவென் னே. (நி-ஏ)
என்னே யுனதாண்மை யீசசொடுங் காட்டனலே
யுன்வாயிட் டுண்டுகந்தை யால். (நிசு)
ஆலிலையிற் பாலகனை யன்றுபெரு நீர்த்துயின்ற
மாலிறையே நீயருள வா. (சுo)
திருமால்குறள்வெண்பா. சு

வாளுடைக் காப்பாலின் வண்ணக் கடல்சடைந்தோ
கோளு கணைக்கிடந்த கோ. [ன் (சுக)

கோமன்ன ரைப்பலகாற் கொற்ற மடக்கியது
கோமன் மழுவான் சினம். (சுஉ)

சினங்கொண்ட தானவனைச் செற்றதிருக் கேழன்
மனங்கொண்டேற் குண்டோ மறம். (சுங)
மறவாமை யாய்க்கடலுண் மந்தரத்தைத் தாங்கு
மிறைவா வினைக்கா ரிணை. (சுச)

இணையிலாப் பெண்ணணங்கா வின்னமுத மீந்த
துணைவா வதன்மூலஞ் சொல். (சுஞ)
சொல்லரிய தூன்பத்தென் றுன்மதியே னின்பதத்
புல்லுவதெக் காலம் புகல். [தைப் (சுசு)

புகல்புகுந்தே னின்னைப் புயல்வண்ணா கண்ணா
நிகலென்ன செய்யு மினி. (சுஎ)
இனியஞ்சே னெஞ்சமே யெம்பெருமான் காக்க

நனிநன்று னம்மை நயந்து. (சுஅ)

நயமுணரா வைம்பொறியை நம்பிக்கெட் டேனைத்
தையையுடையாய் நன்மையுறத் தாங்கு. (சுக)

தாங்கா திகழ்ந்திடினீ தாமோ தராவென்னைத்
தாங்காப் பவரெவரோ தான். (எ0)

தானை தனக்கினையாந் தாசரதி கோசிகனைக்
சோனைசக் சொண்டதற்கென் கூறு. (எக)
கூறு பிறைச்சடையான் கொண்டவில்லைக் கொற்
வேறுபடச் செய்தாய் விரும்பு. [றவையுள்(எஉ)
க0 திருமாலருள்வணபா.

விரும்பு சுவைக்கனியே விண்ணமுதே செயய
கரும்பே கருமணியே கா. (எக)

காகா வெனவீழ்ந்த காக்கையினை நீகாத்த
மாகாத்தா னென்பரதென் மற்று. (எச)
மற்றுரா ரென்சொல்லார் மாயனைவிட் டன்னியரைப்
பற்றிப் பதம்பணிந்தக் கால். (எந)
காற்றுகளாற் காருத்தா கல்லினைப்பெண் ணாக்கிய
னென்றதற்குக் கிடுண்டோ வீங்கு. [கின்ற (எசு)
சங்குமயற் கண்ணழுந்தி யெம்மான் பெயர்மறந்தி
ராங்குமச் சார்துனையா வார். (எஎ)

வார்கடலை யோர்கணையால் வற்றுவித்த வில்லவநின்
கார்மேனி யென்கண்முன் காட்டு. (௭௪)
காட்டும் பலமாயக் காட்சியினை யானறிய
மாட்டுவனோ மாமாயா மன். (௭௫)

மன்னா மணிவண்ணா மாயவனே மாமார்பா
வென்னாத நெஞ்சே யிரங்கு. (௮௦)

இரங்காத வாலிபட வீசா மறைந்து
சரங்கோத்த தென்னோ சரி. (௮௧
சரிவளைக்கை மாதரார் தம்வலையுட் சிக்கி
யிரிமனமே யெம்மானை யேத்து. (௮௨)
ஏத்தவறி யாவெளியே னீடேற வின்னருளாற்
காத்திடநீ நின்னுட் கருது. (௮௩)
கருதரிய மேனியாய் காயாம்பூ வண்ணா
வொருதனியே னெஞ்சத்து ளொன்று. (௮௪)
[illegible]
பெருமாவ[illegible]

பேசறியேன் சொல்லற[illegible]
வாசகத்தை நீயினிதா வாங்கு.
வாங்கு திரைக்கரையுள் வந்துபணி வீடண[illegible]
ஞாங்கிலங்கை தந்ததுமெவ் வாறு. (௮௭)
ஆறணிந்த வேணியனு மம்புயத்தோ னும்முடலி
கூறுபெறக் கொண்டோயெற் கொள்.

தொன்னா தினியுலகுங் கூற்றுமெனை யுள்ளாது
புள்ளேற்று மென்னுட் புகு. (அக)
புகலரிய நான்மறைக்கும் போற்றரியாய் நிற்குக்
குகன்றம்பி யானதுமோர் கூத்து. (கo)
கூத்தன்போற் பல்லுருவங் கொள்ளுமுயிர் கோபா
நீத்தொழிலே நீத்திருக்கச் செய். [லா (கஅ)
செயலிரு காடதனைச் சேரச் சராசரங்க
ளாயபணித் தாயென் னருள். (கஉ)

அருளொழுகு கண்ணிணையு மம்புயநேர் வாயும்
பருளறையான் காணவெதிர் வா. (கங)

வாயுனையே வாழ்த்துவதன் வண்ணத்தைக் காண்க
மாயவன்பேர் கேட்கசெவி மற்று. [விழி (கச)
மற்றென்ன செய்வேனுன் மாலெனின் பொற்பாதக்
குற்றேவ லன்றிக் குறித்து. (கடு)
குறித்தவெலாம் வந்தெய்துங் கோள்கொடுமை செய்
தறித்தனயன் பேர்சொல்லத் தான். [யா (கசு)
தானவனை வேரறுத்த தாமோ தரற்கடிய
னெனவென் னெஞ்சேவை நார். (கஎ)

ேபெ விண்ணமுதே செய்ய
ா கா. (கூஅ)

பர் பாடநெஞ்சே
காக்
ம்ப ணடி. (கூகூ)

ாதூவி நற்றூபங் காட்டியுனைப்
மறை
பாடுவேற் குண்டோ பவம். (க00)

வபாசத் துள்ளாழ்ந்து பட்டோழிவன் மாயா
காற்று-க நீமுனிந்தா லன்று. (க0க)
னைற்
அன்றே வலதின்றே வத்தா வெனக்குறுதி
யென்றே வெனைக்காத் திரு. (க0உ)

இருவினையு ளாப்புண்ட வின்னுயிர்கா ளெம்மான்
றிருவடியைச் சேர்மின் றினம். (க0ஙூ)
தினமா தரைநாடுந் நீமனனே சோதி
வனமாலை மார்பனையே வாழ்த்து. (க0ச)
வாழ்த்துகந்து வல்லமருள் வாணற் குயிரளித்த
காழ்த்திறத்த வில்லுடையாய் கா. (க0ஞ)
காராணைக் கற்பகத்தைக் கண்மணியைக் கோமளத்
சீராணை யென்னுளமே செப்பு. [தைச் (க0சு)
செப்பே னுனாமஞ் சீர்மையிலார் நட்புவிடே
னெப்போ தறுவே னிடர். (க0எ)
இடரே தினிநெஞ்சே யெந்தமக்கா நின்று
மடநீக்குந் தெய்வ மணி. (க0அ)

முற்றிற்று.

(ஆக்கியோன் பெயர்.)

திருமால் குறள்வெண்பா செய்தானும் புன்னை
வருசினி வாசன் மகிழ்ந்து.